DINAKARAN 23 AUG 09

துணை முதல்வர்

# மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு

கோவை, ஆக. 23: கோவை, திருப்பூர் மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தமிழக துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று இரவு சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தார். அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஈஷா யோகா மையத்தின் பசுமைத் திட்டம் சார்பில், 2.5 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் விழா திருப்பூரில் இன்று காலை 8 மணிக்கு நடக்கிறது. சத்குரு ஜக்கி வாசுதேவ் தலைமை தாங்குகிறார். விழாவில் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு மரம் நடும் பணிகளை துவக்கி வைக்கிறார்.

தொடர்ந்து வால்பாறை செல்லும் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் அங்கு அரசு கல்லூரியில் ரூ.55 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள புதிய வகுப்பறைகளை திறந்து வைக்கிறார். தொடர்ந்து ரூ.2.5 கோடியில் கட்டப்பட இருக்கும் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டி நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகிறார்.

பின், கோவை வரும் துணை முதல்வர், சரவணம்பட்டி கீரநத்தம் கிராமத்தில் மாலை 5 மணிக்கு காக்னிஸன்ட் தொழில்நுட்ப வளாகத்தை திறந்து வைக்கிறார். இந்த விழாவில் மத்திய அமைச்சர் ஆ.ராசா, தமிழக அமைச்சர்கள் பொங்கலூர் பழனிசாமி, பூங்கோதை உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

துணை முதல்வர் வருகையையொட்டி கோவை, திருப்பூர் மாவட்டத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.